மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது அந்த இடத்தில் யார் யார் தொழில் தொடங்க மைக்கா மூலப்பொருள் வேண்டுமென்று கேட்கிறார்களோ, அவர்களுக்கு மைக்கா வெட்டி எடுக்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

பெயின்டு உற்பத்திப் பொருள்கள்.

* 132 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கைப் பகுதியில் பெயின்டுகள் செய்வதற்கான தாதுப் பொருட்கள் கிடைப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம். சிவகெங்கைக்கு அருகில் மஞ்சள் மாக்கல் பாறையும் சிவப்பு இரும்புக்கல்லும், மாக்கல் பாறையுடன் கலந்து 2.56 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் கிடைக்கின்றது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த பெயின்ட் தொழிலுக்கான மூலப்பொருளைப் பயன்படுத்தி, அரசுத் துறையில் உடனடியாக ஒரு தொழிற்சாலையை அங்கு ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்கு தொழில் தொடங்கக் கூடிய அளவுக்கு இல்லை—அன் எக்கனமிக் ஸ்கீமாக இருக்கிறது. தொழில் தொடங்க முடியுமா என்று அறிய மீண்டும் பரிசீலனைச் செய்யப்படுகிறது.

ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில் சிற்றுண்டி விடுதி.

* 133 வினா.—திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரியில் தொழிலாளர் வசதிக்காக கான்டீன் (சிற்றுண்டி விடுதி) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?